முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 118/2022

நாள். 24.11.2025 வா.சா.1 – திரு.ஜெயராமன்

த/பெ - திரு.குமாரசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) உங்கள் தந்தை 2012 ல் இறந்த பிறகு நீங்களும் மற்ற வாரிசுகளும் பட்டியல் தபசில் 1ம் சொத்தை அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரி தான். 50 வருடங்களுக்கு மேலாக வழக்கு பட்டியல் 3ம் தபசில் சொத்து வழியாக டிராக்டர், நெல் அறுவடை இயந்திரங்கள் சென்று அனுபவித்து வருவதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரி தான். வழக்கு பட்டியல் 2 மற்றும் 3ம் தபசில் சொத்து வழியாக டிராக்டர், நெல் அறுவடை இயந்திரங்கள் பயன் படுத்தி 1ம் தபசில் சொத்தில் விவசாயம் செய்ததையோ, அனுபவித்து வந்ததற்கோ எந்த ஆவணங்களும், தடயங்களும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

2) உங்களது நிரூபண சாட்சிய வாக்குமூலம் 16 வது பாராவில் 2ம் தபசில் பாதை வழியாக மட்டும் 1ம் தபசில் சொத்திற்கு செல்ல முடியும், வேறு பாதை எதுவும் 1ம் தபசில் சொத்திற்கு செல்ல முடியாது என்று கூறி உள்ளீர்கள் என்றால் சரி தான். வழக்கு பட்டியல் 3ம் தபசில் சொத்து என்று எதுவும் கிடையாது அதனால் தான் உங்கள் நிரூபண சாட்சிய வாக்குமூலத்தில் 2ம் தபசில் சொத்து என்று

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:31:20 +0530

குறிப்பிட்டுள்ளீர்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி தான் 3ம் தபசில் சொத்து என்று சாட்சி கூறுகிறார். மேற்படி சங்கதிகளை இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

3) வழக்கு பட்டியல் 2 மற்றும் 3 ம் தபசில் சொத்து வழியாக நீங்களோ மற்ற வாதிகளோ பாதையாக பயன் படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. பிராதில் உங்கள் தந்தைக்கும், பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை வழக்கு நடந்து அந்த வன்மத்தில் வழக்கு பட்டியல் 3 ம் தபசில் சொத்து வழியாக செல்வதை பிரதிவாதி தடை செய்தார் என்றால் அது பொய் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிக்கும், உங்கள் தந்தைக்கும் இடையே பாகப்பிரிவினை செய்வதற்கு எந்த உறவு முறையும் கிடையாது என்றும் இந்த வழக்கு தாக்கல் வாதிகளால் உருவாக்கப்பட்ட பொய்யான வழக்கு மூலம் என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கில் 2, 3 ம் தபசில் சொத்துக்களில் எந்த வித அனுபவ உரிமையும் கோர சட்டப்படியான எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல, எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்தாகும். 1ம் தபசில் சொத்தில் மற்ற சகோதரர்களும் வாரிசுதாரர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்தும் அதன் வடக்கே உள்ள

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.11.24 13:31:27 +0530

மற்ற சொத்துக்களுக்கும் அதன் அருகில் உள்ள கால் வழியாகத் தான் தேசிய நெடுஞ்சாலைக்கு செல்கிறார்கள் என்றால் சரியல்ல, கால் குளத்திற்கு செல்கிறது, அது தண்ணீர் கால் ஆகும்.

5) 1ம் தபசில் சொத்தின் அருகே மிக பெரிய மின்சாரம் தயாரிக்கும் மின் விசிறிகள் அமைக்கப்பட்டுள்ளது, அந்த மின் விசிறிகளை அமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் கனரக வாகனங்கள் வந்து செல்கின்றன, அந்த பாதை வழியாக நீங்கள் சென்று வரலாம் என்றால் அந்த பாதை வழியாக நடந்து கூட வரமுடியாது. வழக்கு பட்டியல் 2, 3 சொத்துக்களுக்கு 2003 ம் ஆண்டில் கல் நட்டு இரும்பு வேலி அமைத்து பராமரித்து வருகிறார் 2, 3 சொத்துக்களின் பாதை வழியாக யாரும் நுழைந்ததில்லை என்றும் யாராலும் நுழைய முடியாது என்றால் சரியல்ல. இன்று வரை அந்த பாதை வழியாகத் தான் போய் வருகிறோம்.

6) 1ம் தபசில் சொத்தில் இது வரை நீங்கள் விவசாயம் எதுவும் செய்யவில்லை, வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை செய்ய முடியவில்லை என்றும் 1ம் தபசில் சொத்து தரிசு நிலமாக கிடக்கிறது என்றால் சரியல்ல. நன் செய் பயிர் செய்து 15 நாட்கள் ஆகிறது என்று சாட்சி கூறுகிறார். நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவுமே இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. GPS வழியாக போட்டோ எடுக்கப்பட்டுள்ளது, அதில்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:31:33 +0530

Location உள்ளது. GPS ல் போட்டோ எடுத்ததாக நீங்கள் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

7) மதுரை உயர் நீதிமன்றத்தில் S.A.No. 239/2010 இவ்வழக்கு பட்டிகை 2, 3 சொத்துக்களுக்கும் உங்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய வன்மத்தில் நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பட்டிகை 2, 3 தபசில் சொத்தில் 23 அடி அகலமும், 187 அடி நீளமும் பாதை இருப்பதாக அதை 50 வருடமாக நீங்கள் அனுபவித்து வருவதற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல, 3ம் தபசில் சொத்து எங்கள் சொந்த பாதை ஆகும். பொய்யான இந்த வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.24 13:31:38 +0530